**நெல் சந்தைப்படுத்தல் சபை – 2016**

---

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கண்ககாய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் பெறுபேறாக, நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கலைச் செய்வதற்கான அவசியம் காணப்பட்டதா என்பதனை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெறமுடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனம் தொடர்ந்து இயங்குதல்

நடைமுறை ஆண்டின் இறுதியில் தேறிய சொத்து ரூபா 12,060,577,822 நேர்மறை மீதியைக் காட்டிய போதும் அது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பீட்டளவில் 96 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேவேளை சபை வழமையாக கொள்வனவு செய்திருந்த நெல் கையிருப்பானது சந்தை விலையிலும் மற்றம் கிரயத்தை விட குறைந்த விலையிலும் விற்பனை செய்யப்பட்டதால் அடுத்த போகத்தின் போது நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியைப் பெறுவதற்கும் விற்பனையால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கும் வருடாந்தம் திறைசேரியிடமிருந்தும் அரச வங்கிகளிடமிருந்தும் கடன் உதவி பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான நெல் கொள்வனவு மற்றும் செயற்பாட்டுச் செலவினம் என்பவற்றிற்கு 03 அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மற்றும் முற்பணத்தொகையானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி திரண்ட செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 17,965.3 மில்லியனும் அதற்காக செலுத்த வேண்டிய திரண்ட கடன் வட்டி ரூபா 623.9 மில்லியன் ஆகவிருந்தது. இதன் காரணமாக அரசின் அல்லது ஏனைய நிதி அனுசரணை இல்லாது சபையின் நடவடிக்கை தொடர்ந்து இயங்குவதற்கு முடியாத நிலை உருவாக்க கூடுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் கீழ் 51 ஆம் பந்தியின் அடிப்படையில் நடைமுறையல்லாத சொத்து தொடர்பாக பலன் தரும் ஆயுட்காலம் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்படாமையினால் கிரயம் ரூபா 3,322,135 ஆக உள்ள பொறி வாகனம் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் முழுமையாக பெறுமான தேய்விடப்பட்டிருந்த போதும் தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. அதற்கமைய மதிப்பீட்டில் ஏற்பட்ட பிழை காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 08 ஆம் பிரிவின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருப்பினும் சென்ற ஆண்டுகளிலும் நடப்பாண்டிலும் நிதிக்கூற்றுக்களில் இந்த லொறி வாகனத்தின் தேறிய புத்தக பெறுமதியாக ரூபா 443,735 காட்டப்பட்டுள்ளது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2016 ஆம் ஆண்டில் ரூபா 1,310,073 பெறுமதியான பண்டகசாலை புதுப்பித்தல் வேலை முழுமையாக முடிவுற்றிருந்த போதும் 2016 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அதனால் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி நிதி நிலைமைக்கூற்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக் கணக்கிலும் காணி, கட்டிடம் கணக்கிலும் மீதித்தொகை அந்த பெறுமானத்தினால் முறையாக கூடுதலாகவும் குறைவாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதுள்ளது.

| **கணக்கு விடயம்** | | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| (அ) | வியாபாரக் கடன்பட்டோர் | | |
| | (i) இனங்காணப்படாத நெல் கொள்வனவு | 65,235,117 | விரிவான தகவல்கள் மீதிகைள உறுதிப்படுத்தல் |
| | (ii) கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 49,743,530 | |
| | (iii) Rice Millers கடனுக்கு விற்பனை | 45,049,804 | |
| | (iv) கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் | 462,689,308 | |
| | (v) லங்கா சதோசா | 77,526,708 | |
| (ஆ) | காய்ந்து போவதாலான கிரயம் (Driage) | 290,772,157 | குறித்த விகிதத்தை தீர்மானம் செய்தமைக்கான அங்கீகாரம் |
| (இ) | திறைசேரிக்கு கொடுக்க வேண்டிய மீதி | 7,067,901,995 | மீதியை உறுதிப்படுத்தல் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் ரூபா 2,013,370,698 ஆக உள்ள கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 60,335,368 உம், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்குமிடையேயான ரூபா 1,221,014,477 உம், வருடம் 01 முதல் 03 வரையிலான ரூபா 710,471,802 உம் ஓராண்டிற்குக் குறைந்த ரூபா 21,549,051 மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த மீதிகளுக்கு நெல் கொள்வனவு தொடர்பான 2 அல்லது 3 வருட காலப்பகுதிகளில் இனங்காணப்படாத மீதியான ரூபா 65,235,117 உம் காணப்படுகின்றது. இம்மீதிகளை அறவீடு செய்வதற்கு 2018 மார்ச் 20 ஆந் திகதி வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் ரூபா 7,686,883,820 ஆகவுள்ள கடன் கொடுத்தோர் மீதியில் 4 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 283,347,458 மீதியும், 3 வருடங்களுக்கும் 4 வருடங்களுக்குமிடையேயான ரூபா 354,858,937 மீதியும், ஆண்டு 1 முதல் 3 வரையான ரூபா 6,803,585,024 மீதியும் ஒரு வருடத்திற்கும் குறைவான ரூபா 245,092,402 மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இம்மீதிக்குள் திறைசேரிக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா 7,067,901,996 உம் காணப்பட்டதுடன் இம்மீதிகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை 2018 யூலை 20 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப்பிரமாணம் 188(2) | 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வரும் ரூபா 9,865,253 பெறுமதியான தேறாத வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 756 | நடப்பாண்டின் இறுதியில் புத்தக பெறுமதி ரூபா 9,692,405,242 ஆகவுள்ள நெல் கையிருப்பு தொடர்பாக பௌதீக தொகை மதிப்பீடு செய்யப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் சபையின் நிதிப் பெறுபேறு ரூபா 5,894,325,856 நட்டத்தைக் காட்டியது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,771,072,410 ஆக இருந்த போதும் சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் நிதிப் பெறுபேறானது ரூபா 4,123,253,446 நலிவை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 8,464,174,689 ஆல் அதிகரித்த போதும் விற்பனை கிரயம், நிர்வாக செலவு மற்றும் நிதிச் செலவு முறையாக ரூபா 12,183,280,871 உம், ரூபா 24,446,534 ஆல் மற்றும் ரூபா 371,968,211 ஆல் அதிகரித்தமையே மேலே கூறப்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமான காரணியாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டின் நிதிப்பெறுபேற்றில் 48 சதவீத நலிவை அவதானிக்க கூடியதாக இருந்தது. 2013 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் 9 சதவீதத்தினாலும் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 57 சதவீதத்தினாலும் நிதிப்பெறுபேறு அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 239 சதவீதத்தால் நிதிப்பெறுபேறு நலிவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை நிதிப்பெறுபேற்றில் மீண்டும் சீராக்கல் செய்கையில் 2015 ஆம் ஆண்டில் சபையின் ரூபா 1,717,543,386 எதிர்மறைப் பங்களிப்பானது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 5,824,719,237 எதிர்மறை பங்களிப்பை வழங்கி 239 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் களஞ்சிய சாலைகளில் நெல் அடுக்குவதற்கு தேவைப்படும் நில ராக்கைகள் 12,000 ரூபா 80,826,550 க்கு கொள்வனவு செய்திருந்த போதும், அத்தகைய நில ராக்கைகள் கொள்வனவு செய்யும் போது ராக்கைகளில் இருக்க கூடிய தொழில்நுட்ப விபரக்குறிப்பு முறையாக தயாரிக்கப்படாதமையால் நில ராக்கைகளின் அமைப்பு வேறுபடுவதுடன் காய்ந்த பலகைகள் பாவிக்கப்படதாமையினால் பலகை துண்டுகளில் ஆணி கழன்று செல்லும் நிலைமை ஏற்பட்டிருந்ததை உள்ளக கணக்காய்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி இலக்கம் பிஎம்பீ/எப்1/15/2015 உடைய சபையினால் வெளியிடப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், முற்பணம் பெறப்பட்ட 07 நாட்களுக்குள் அது தீர்த்து வைக்கப்பட வேண்டும். இருப்பினும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 யூன் 10 ஆந் திகதி வரை பெறப்பட்ட முற்பணத் தொகையில் ரூபா 1,591,360 ஆனது 2018 யூன் 10 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்படவில்லை. அவ்வாறே முற்பணம் பெற்றுக்கொண்டு தீர்த்து வைக்கப்படாத போதிலும் அவ் உத்தியோகத்தர்களுக்கே மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 69,110,454 உம் அதற்கான வட்டி ரூபா 6,759,122 உம் ஆக இருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் இயந்திர உபகரண சொத்தின் கீழ் தேறிய பெறுமானம் பூச்சியமாக காட்டப்பட்டுள்ள போதும் அதன் கிரயம் ரூபா 7,329,412 ஆகும். இச்சொத்து இன்னும் பாவிக்க கூடியவையாயின் மறு மதிப்பீடு செய்து கணக்குகளில் பதிவு செய்யப்படவும் அல்லது பாவிக்க முடியாதவையாயின் சரியான முறையில் கணக்குகளிலிருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

சபைக்கு சொந்தமான பௌதீக ரீதியில் இல்லாததுமான ரூபா 54,385,222 பெறுமதியான கையிருப்பானது 2012 ஆம் ஆண்டு முதல் இடைப்போக்கில் உள்ள கையிருப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

### 4.3 அடையாளம் காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 யூலை 27 ஆந் திகதி அமப/16/1354/732/024 ஆம் இலக்க ''பெரும்போகத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நெற் தொகையை அகற்றுதல்'' தொடர்பான அமைச்சரவை அனுமதிக்கு அமைவாக 2014/15 பெரும்போகத்தில் நெல் கிலோ ஒன்று ரூபா 45 படி கொள்வனவு செய்யப்பட்ட நாட்டரிசி மெட்ரிக்தொன் 595 கிலோ ஒன்று ரூபா 42 படி தனியார் கம்பனிக்கு விற்பனை செய்ததால் சபைக்கு ரூபா 5.95 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) எதிர்வரும் காலங்களில் திறந்த சந்தையில் கூடியளவு அரசி கையிருப்பு அதிகரிக்கும் என்பதனால் விளைச்சல் அறுவடை செய்யும் காலத்தில் நெல் களஞ்சிய சாலையை காலியாக்குவதற்கு சபையிலுள்ள நெல் கிலோ ரூபா 24 படி விலங்கு உணவு மற்றும் அரசி மா உற்பத்திக்காக விற்பனை செய்வதற்கு 2016 மார்ச் 02 ஆந் திகதி அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றிருந்த போதும் கிராமிய பொருளாதாரம் தொடர்பாக அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டம்) 2016 மார்ச் 05 ஆந் திகதி இலக்கம் எம்ஆர்எஸ்ஏ/5/2/1/1 மஹ 2015/16 உடைய கடிதத்திற்கு அமைவாக நெல் சந்தைப்படுத்தல் சபையிலுள்ள மனித பாவனைக்கு உதவாத நெல் கையிருப்பை அடையாளம் கண்டு விலங்கு உணவுக்காக விற்பனை செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினம், ஒரு கிலோகிராம் ரூபா 45 படி கொள்வனவு செய்த நல்ல நிலையிலுள்ள நெல் கிலோகிராம் 88,616,309 மற்றும் நாட்டு நெல் கிலோ 2,800,935 கிலோ ஒன்று ரூபா 24 படி முறையாக விலங்குணவிற்காக 9 தனியார் கம்பனிகளும் அரிசி மா உற்பத்திக்காக 02 கம்பனிகளுக்கும் விற்பனை செய்ததால் முறையாக ரூபா 2,487.7 மில்லியன் மற்றும் ரூபா 78.57 மில்லியன் நட்டமும் ஏற்பட்டிருந்தன.

(இ) 2015 யூன் 17 ஆந் திகதி இலக்கம் 15/0744/608/013 உடைய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் 2014/15 பெரும்போகத்தின் போது கொள்வனவு செய்த நெல் கையிருப்பை விற்பனை செய்வதற்காக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்த போதும் அதன் மூலம் பெறப்பட்ட விலையானது சந்தை விலையிலும் குறைவாகக் காணப்பட்டது. அதனால் 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி இலக்கம் சீஎல்டீ/5/6/1/1/மஹ/2014/15 உடைய உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுரைகளின் பிரகாரம் பத்திரிகை விளம்பரத்தின் ஊடாக விலை அனுப்பியிருந்த 11 கொள்வனவாளர்களுக்கும் பெக்ஸ் மூலமாக மறுபடியும் விலைகோரி கூடிய விலை நியமித்திருந்த கொள்வனவாளனுக்கு கிலோ ஒன்று ரூபா 46 படி சம்பா நெல் கிலோகிராம் 8,797,825 மற்றும் ஒரு கிலோ ரூபா 46.50 படி கீரி சம்பா கிலோகிராம் 3,623,761 விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும் சபையினால் இந்த நெல் கிலோ ஒன்று ரூபா 50 படி கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் நெல் விற்பனையினால் சபைக்கு ரூபா 47,874,464 நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதி இலக்கம் பீஈடீ/12 உடைய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 இன் பிரகாரம், நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2016 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 ஆண்டறிக்கைகளைச் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

2013 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கை தொடர்பாக 2018 யூன் 05 ஆந் திகதி அமைச்சரவை அனுமதி பெறப்பட்ட போதும் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. 2014 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையானது சபையினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வவ்போது தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வாகனக் கட்டுப்பாடு | ஓட்ட அட்டவணைகள் முறையாகப் பேணப்படாமையும், குறிப்புக்களில் மாற்றங்கள் செய்யப்படுவதும், வாகன பதிவேடு பேணப்படாமையும், காரியாலய தேவைக்காக வாகனம் வழங்கப்படும் போது அதற்குரிய கோரிக்கையும் அங்கீகாரமும் முறைப்படி மேற்கொள்ளப்படாமை, எரிபொருள் கொள்வனவு ஓட்ட அட்டவணையில் பதிவு செய்யப்படாமை. |
| (ஆ) களஞ்சிய நிர்வாகம் | சரியான தரத்தில் நெல் களஞ்சியப்படுத்தாமையும், களஞ்சிய கூற்று அல்லது பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமையும் |